[1972 ஆகஸ்ட் 24

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, 12 பெண்களுக்கு தண்டனை அளிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். தண்டிக்கப்பட்டவர்களே மீண்டும் நடனமாடுவதாகச் சொன்னார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு தண்டனையைக் கடுமைப்படுத்த அரசு முயலுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தண்டனையைப் பொறுத்த வரை, 15 ரூபாய், 30 ரூபாய் என்று அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. அதை நடனத்துக்கு ஏற்பாடு செய்கிறவர்களே செலுத்தி விடுகிறார்கள். ஆனால் இப்போது கண்காட்சி நடத்துகிறவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை முன் பணமாகச் செலுத்த வேண்டும். அதாவது 5,000, 10,000 என்று இருக்கலாம். அந்த நிர்ணயத் தொகையை மாவட்ட கலெக்டரிடம் முன் பணமாகச் செலுத்த வேண்டும். கண்காட்சியில் ஆபாச நடனம் நடத்தினால், அந்த முன் பணம் முழுவதும் பறிமுதல் செய்யப்படும். இப்படிப்பட்ட நிலை உருவாக மாவட்ட ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

THIRU G. VASANTHA PAI : May I know from the Hon. the Chief Minister where these teen-aged girls were prosecuted for their obscene dances in Madras City?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்ற பார்க் ஃபேர் கண்காட்சியிலும் கண்ணப்பர் திடலில் நடைபெற்ற கண்காட்சியிலும் அவர்கள் பிடிக்கப்பட்டு தண்டிக்கப் பட்டார்கள்.

Beer Factory

* 235 *Q*.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a Beer Factory is expected to be set up in Thanjavur district in the private sector; and

(*b*) if so, the details of the project including the proposed assistance by the State?

"பீர்" தயாரிக்கும் தொழிற்சாலை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தனியார் துறையின்கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் "பீர்" தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும் என்பது உண்மையா ?

1972 ஆகஸ்ட் 24]

(இ) ஆமெனில், மாநில அரசு வழங்கக் கருதியுள்ள நிதி உதவி உட்பட அத்திட்டத்தின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : (அ) & (இ) ஆம். சென்னையிலுள்ள சுல்தான் மரைக்காயர் அண்ட் சன்ஸ் எனும் நிறுவனத்திற்கு, பீர் மட்டும் தயாரிக்கும் வடிப்பகம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந் நிறுவனம் "சவுத் இந்தியா ப்ரூயரிஸ் லிமிடெட்" என்ற பெயரில் ஒரு வடிப்பகம், தஞ்சை மாவட்டத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு சுமார் 60,000 ஹெக்டா லிட்டர் பீர் உற்பத்தி செய்யப்படும். வடிப்பகம் அமைக்கும் இடம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. தேவைப் படும் அரசு உதவிகள் எவை என்று குறிப்பிடக்கூடிய கட்டம் இன்னும் ஏற்படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இது மாதிரி அனுமதி அளிக்கப்படுகிறபோதே, இவ்வளவு காலத்திற்குள்ளாக இந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : சொல்லப்படுகிறது. ஆனல் பல்வேறு இடையூறுகள் காரணமாக அந்தக் கெடுவை நீடித்துக் கொண்டு போகிருர்கள்.

திரு. எல். பலராமன் : சாதாரணமாக மேலை நாடுகளில் பீரை தண்ணீருக்குப் பதிலாகச் சாப்பிடுகிருர்கள் என்று பத்திரிகை வாயிலாகப் படித்திருக்கிறேன். அந்த முறையில் தமிழ் நாட்டு அரசாங்கமும் தண்ணீருக்குப் பதிலாகப் பயன்படுத்த வேண்டு மென்று இது போன்ற தொழிலை ஆரம்பிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : இப்படிச் செய்ய வேண்டு மென்று அங்கத்தினர் விரும்புகின்ருரா?

திரு. வி. வெங்கா : நல்ல லாபம் தருவதால் இது போன்ற தொழில்களை அரசு ஏற்று நடத்த முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : அப்படிப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை.